# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2024–2025

## எழுதுபொருள் மற்றும் அச்சு

### மானியக் கோரிக்கை எண். 30


## மு.பெ. சாமிநாதன்
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2024

| வ. எண். | பொருள் | பக்க எண். |
|---|---|---|
| 1 | ஆக்கமும் வளர்ச்சியும் | 2 |
| 2 | துறையின் நோக்கம் | 2-3 |
| 3 | அலகுகள் செயல்படும் இடங்கள் | 4-5 |
| 4 | எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஒரு பார்வை | 6-33 |
| 5 | அரசு வெளியீடுகள் விற்பனை நிலையங்கள் | 33-35 |
| 6 | பொதுமக்கள் தங்களின் பெயரினை திருத்தம் / மாற்றம் செய்தல் | 35-37 |
| 7 | அரசு அச்சகங்களில் 2023-2024 ஆம் ஆண்டில் அரசுத் துறைகளுக்கு அச்சிட்டு வழங்கப்பட்ட பணிகளின் விவரம் | 38-45 |
| 8 | தொழிலாளர் நலன் | 46-54 |
| 9 | பணியாளர்கள் நியமனம் | 54-55 |
| 10 | வரவு – செலவு | 56 |
| 11 | கழித்தொதுக்கம் | 57 |
| 12 | தகவல் பரவலாக்கம் | 58 |
| 13 | நிறைவுரை | 60 |

**தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை**

**எழுதுபொருள் மற்றும் அச்சு**

**கொள்கை விளக்கக் குறிப்பு**

**2024–2025**

**"அச்சகத்திற்கு முன் புத்தகங்கள் ஒரு ஆடம்பரப் பொருளாக இருந்தது"**

**முன்னுரை**

மனித இனம் தோற்றம் முதல் இக்காலக்கட்டம் வரையில் பல்வேறு நிலைகளில் பல்வேறு பரிணாம மாற்றங்களில் வளர்ச்சி அடைந்து வேரூன்றி நிலைத்து நிற்கிறது. அவ்வாறாகவே, எழுத்துகளும், புத்தகங்களும் பல்வேறாக எழுச்சிப்பெற்று அச்சு இயந்திரங்களின் வளர்ச்சிகளும் நவீன காலகட்டத்தின் தொழில்நுட்பத்திற்கேற்ப நிகழ்காலத்தினை இணைத்து தனிப்பட்ட அடையாளத்தினை அனைத்து தரப்பினருக்கும் எடுத்துச் செல்கிறது. இவ்வாறான அச்சு செயலாக்கத்தில் எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை முக்கிய பங்காற்றி வருகிறது.

## 1. ஆக்கமும் வளர்ச்சியும்.

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையானது சென்னை மாகாணத்தின் ஆட்சி பீடமாக இருந்த புனித ஜார்ஜ் கோட்டையில் அரசிதழ்களை அச்சிட்டு வெளியிட முதன் முதலில் 10 பணியாளர்களுடன் ஒரு சிறிய அச்சகமாக எளிய துவக்கத்துடன் 1831–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 17–ம் நாள் முதல் படிப்படியாக வளர்ச்சியும் எழுச்சியும் பெற்றுள்ளது. மேலும், மாவட்ட ஆட்சியரின் கட்டுப்பாட்டிலிருந்த எழுதுபொருள் பிரிவும், தனியாக செயல்பட்டு வந்த அச்சுத்துறையும் இணைக்கப்பட்டு, 1953–ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் **"எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையாக"** மாற்றப்பட்டு, அனைத்து அரசுத் துறைகளின் அச்சுத் தேவைகளை எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையானது **192** ஆண்டுகளாக நிறைவு செய்து வருகிறது.

## 2. துறையின் நோக்கம்.

தமிழ்நாட்டின் தலைநகரான பெருநகர சென்னையில் எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் அரசு மைய அச்சகம், 5 கிளை அச்சகங்கள் மற்றும் எழுதுபொருள்



அலுவலகம் மூலம் அனைத்து அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களின் எழுதுபொருள் மற்றும் அச்சுத் தேவைகளை பூர்த்தி செய்து வருவதே இத்துறையின் நோக்கமாகும். மேலும், அரசு சார் நிறுவனங்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் நீதித்துறை மூலம் வெளியிடப்படும் நூல்கள் தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக் கழகங்களின் தேர்விற்கான விடைத்தாள்கள் ஆகியவற்றை அரசுக்கு வருவாய் ஈட்டும் வகையில் அச்சுக் கட்டணங்கள் பெற்று அச்சிடும் பணிகளும், பொதுமக்களின் பெயர் மாற்றம் தொடர்பான அரசிதழ்கள் வெளியிடும் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இதைத்தவிர, நவீன தொழில்நுட்ப வளர்ச்சி உள்ள இக்கால சூழலுக்கு ஏற்ற வகையில் நவீன தொழில்நுட்பத்துடன் குறைந்த மனித ஆற்றலைக் கொண்டு பல வண்ணங்களில் உயர் தரத்துடன் விரைவாக அச்சிடும் வண்ணம், அரசு அச்சகங்களின் தரத்தினை உயர்த்தி, நமது நாட்டின் சிறந்த அரசு அச்சகமாக செயல்படுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது.

## 3. அலகுகள் செயல்படும் இடங்கள்.

ஆணையரகத்தின் தலைமையின் கீழ் எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் அலகுகள் பின்வரும் இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

| வ. எண். | அலகு | அமைந்துள்ள இடம் |
|---|---|---|
| 1. | எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகம், சென்னை. | 110, அண்ணாசாலை, சென்னை–600 002. |
| 2. | அரசு மைய அச்சகம், சென்னை. | தங்க சாலை, வள்ளலார் நகர், சென்னை–600 001. |
| 3. | அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை. | பொது அலுவலக வளாகம், சத்தியமூர்த்தி சாலை, புதுக்கோட்டை–622 001. |
| 4. | அரசு கிளை அச்சகம், விருத்தாசலம். | உளுந்தூர்பேட்டை பிரதான சாலை, விருத்தாசலம்–606 002 |
| 5. | அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி. | பிளாட் எண்.சி–9, துவாக்குடி, திருச்சிராப்பள்ளி– 620 015. |
| 6. | அரசு கிளை அச்சகம், சேலம். | ஐந்து ரோடு, சிட்கோ வளாகம், சேலம்–636 004. |
| 7. | அரசு கிளை அச்சகம், மதுரை. | ரேஸ் கோர்ஸ் சாலை, கோ. புதூர், மதுரை–625 007. |
| 8. | அரசு எழுதுபொருள் அலுவலகம், சென்னை. | 64, இராஜாஜி சாலை, சென்னை–600 001. |



சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் இயங்கி வந்த அரசு கிளை அச்சகத்தில் வழக்குப் பட்டியல்கள் அச்சிடும் பணி நிறுத்தப்பட்டதாலும், நீதிமன்ற வளாக விரிவாக்கத்திற்கான இடப்பற்றாக்குறை காரணமாகவும், 30.11.2022 அன்று அச்சக வளாகம் நீதித் துறை வசம் ஒப்படைக்கப்பட்டது.

இது போன்று சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை வளாகத்தில் செயல்பட்டு வந்த அரசு கிளை அச்சகம் மதுரை–23, அரசு கிளை அச்சகம் மதுரை–7 அலகுக்கு இடமாற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து அச்சகம் இயங்கி வந்த கட்டடமானது 20.11.2023 அன்று நீதித் துறை வசம் ஒப்படைக்கப்பட்டது.

## 4. எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை – ஒரு பார்வை.

### அ. நிருவாகம்.

இந்திய ஆட்சிப் பணி நிலையில், துறைத் தலைவரான ஆணையர் அவர்கள் தலைமையின் கீழ் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை செயல்பட்டு வருகிறது. மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் ஒரு இணை இயக்குநர் பொது நிருவாகப் பணிகளையும், பொது மேலாளர் நிலையில் தொழில்நுட்பம் தொடர்பான பணிகளையும் மேற்கொள்வதோடு, தினசரி பணிகள் மற்றும் கொள்கை ரீதியிலான முடிவுகளை மேற்கொள்வதில் ஆணையருக்கு உறுதுணையாக உள்ளனர். கருவூலம் மற்றும் கணக்குத் துறையிலிருந்து வரவு–செலவு, கணக்கு மற்றும் தணிக்கை பணிகளைக் கண்காணிக்க முதன்மை கணக்கு அலுவலர் ஒருவரும், அச்சுக் கட்டணங்களை நிர்ணயம் செய்யவும் தளவாடங்களை மதிப்பீடு செய்யவும் கணக்கு அலுவலர் ஒருவரும், தொழிலாளர்களின் நலன்களை கண்காணிக்க தொழிலாளர் நலத் துறையிலிருந்து தொழிலாளர் நல அலுவலர் ஒருவரும், உதவித் தொழிலாளர் நல



அலுவலர் ஒருவரும் மாற்றுப் பணியில் ஆணையரகத்தில் பணிபுரிந்து வருகிறார்கள்.

### ஆ. பணியாளர்கள்.

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் ஒப்பளிக்கப்பட்ட 4870 பணியிடங்களில் 543 பெண் பணியாளர்களும் 947 ஆண் பணியாளர்களும் ஆக மொத்தம் 1490 பணியாளர்கள் பணிபுரிகிறார்கள். இப்பணியாளர்களில் 233 பணியாளர்கள் மாற்றுத் திறனாளிகள் ஆவர்.

**மாற்றுத் திறனாளி பணியாளர்களின் விவரம்.**

பார்வைத் திறன் குறைந்தோர் 135 (ஆண்–126, பெண்–9), செவித்திறன் மற்றும் பேசும் திறன் குறைந்தோர் 6 (ஆண்–4, பெண்–2), உடல் குறைபாடுகள் உள்ளோர் 91 (ஆண்–59, பெண்–32), மனநலம் சார்ந்த குறைபாடு உள்ளோர் 1 (ஆண்) என மொத்தம் 233 மாற்றுத் திறனாளிகள் பணிபுரிகிறார்கள்.

மாற்றுத் திறனாளிகள் தன்னம்பிக்கையுடன் வாழ, அரசுப் பணியில் அரசு நிர்ணயித்துள்ள 4 விழுக்காட்டினை காட்டிலும் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் 16 விழுக்காடு மாற்றுத் திறனாளிகள் பணிபுரிந்து வருவது இத்துறையின் தனிச் சிறப்பாகும்.

இதைத் தவிர, நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய இயந்திரங்களை இயக்குவதற்கு உரிய தொழில்நுட்பக் கல்வித் தகுதியுடன் அரசு அச்சகங்கள் 341 பெண் பணியாளர்களுடன் (23 விழுக்காடு) எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையானது வீறுநடை போட்டு இயங்கி வருகிறது.

**இ. எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் அலகுகள்.**

சென்னை மாவட்ட ஆட்சியரின் கட்டுப்பாட்டிலிருந்த எழுதுபொருள் பிரிவும், தனியாக செயல்பட்டு வந்த அச்சுத் துறையும் இணைக்கப்பட்டு, 1953–ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் "எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையாக" மாற்றப்பட்டது.

**1) ஆணையரகம்.**

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் தலைமையிடமான ஆணையரகத்தின் நிருவாக அமைப்பானது ஐந்து பிரிவுகளாக 14 அலுவலர்கள் மற்றும் 187 பணியாளர்களுடன் செயல்பட்டு வருகிறது. நிருவாகப் பிரிவில் இணை இயக்குநர் / மாவட்ட வருவாய் அலுவலர்–1, உதவி இயக்குநர் நிலையில் ஆணையரின் நேர்முக உதவியாளர்–1, உதவி இயக்குநர்கள்–2, தொழில்நுட்ப பிரிவில் பொது



மேலாளர்–1, துணைப் பணி மேலாளர் நிலையில் மேலாண்மை குறிக்கோள் ஆலோசகர் –1, உதவிப் பணி மேலாளர் (கொள்முதல்)–1 மற்றும் உதவிப் பணி மேலாளர் (படிவங்கள்)–1, வெளியீடுகள் பிரிவில் உதவி இயக்குநர்–1, தொழிலாளர் நலப் பிரிவில் உதவி ஆணையர் நிலையில் தொழிலாளர் நல அலுவலர்–1, துணை ஆய்வாளர் நிலையில் உதவித் தொழிலாளர் நல அலுவலர்–1, கணக்கு மற்றும் தணிக்கைப் பிரிவில் முதன்மைக் கணக்கு அலுவலர்–1 மற்றும் விலை மதிப்பீட்டு கணக்கு அலுவலர் – 1 ஆகியோர் பணிபுரிந்து வருகின்றனர்.

**தலைமை அலுவலகத்தின் செயல்பாடுகள்.**

(i) நவீன தொழில்நுட்ப இயந்திரங்கள், இயந்திரங்களுக்கான உதிரி பாகங்கள், அச்சுப் பணிகளுக்குத் தேவையான பல்வகை காகித இனங்கள், அட்டைகள், அச்சுப் பயன்பாட்டுப் பொருட்கள், கணினிகள், உதிரி பாகங்கள் மற்றும் இதர அலுவலக பயன்பாட்டுப் பொருட்களை அரசு விதிகளின்படி, தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற திறந்தவெளி ஒப்பந்தப் புள்ளிகள் மூலம் கொள்முதல் செய்து

இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அரசு அச்சகங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

(ii) அச்சுப் பணிக்குத் தேவையான காகித இனங்கள் மற்றும் பல்வேறு காகித இனங்களில் 90 சதவீதம், தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனம் மூலமாகவும், சிறப்பு வகை காகிதங்கள் மற்றும் அட்டைகள், தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற திறந்தவெளி ஒப்பந்தப் புள்ளிகளின்படி, கொள்முதல் செய்து தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசுத் துறைகள் / அரசு அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

(iii) அரசு மைய அச்சகம் மற்றும் அரசு கிளை அச்சகங்களில் இயங்கிவரும் இயந்திரங்கள், மனித ஆற்றல் மற்றும் கொள்திறன் ஆகியவற்றை கணக்கில் கொண்டு அச்சுப் பணிகளை ஒதுக்கீடு செய்தும் செயலாக்கத்தினை கண்காணித்தும் வருகிறது.

(iv) படிவங்கள், பதிவேடுகள், அச்சுக் கட்டணம் பெற்று பல்கலைக்கழக விடைத்தாள்கள் அச்சிடுதல், தமிழ்ப் பல்கலைக்கழகம்,



தொல்லியல் துறை, தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்கள் வெளியிடும் நூல்களுக்கு அச்சுக் கட்டணம் நிர்ணயித்தல், தமிழ் வளர்ச்சித் துறையின் மானியத்துடன் தனியார் அச்சகங்களில் அச்சடிக்கப்பட்ட நூல்களுக்கான அச்சுக் கட்டணத்தை சரிபார்த்தல் மற்றும் விலை நிர்ணயம் செய்தல் ஆகியவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(v) கட்டண முறையில் அரசிதழ்களில் பெயர் மாற்றம் மற்றும் மதம் மாற்றம் தொடர்பான பெயர் மாற்றம் மற்றும் திருநங்கைகளுக்கு இலவசமாக பெயர் மாற்றம் செய்தல், அரசின் அறிவிக்கைகள், நீதிமன்றங்களால் வெளியிடப்படும் நொடிப்பு மனுக்கள் ஆகியவற்றை வெளியிடுதல் போன்ற முக்கிய பணிகளும் ஆணையரகத்தில் உள்ள வெளியீடுகள் விற்பனை நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(vi) இதைத் தவிர, இத்துறையின் அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் பணியமைப்பு பணிகளும் மேற்கொள்ளப்படுகிறது.

**2) அரசு எழுதுபொருள் அலுவலகம்.**

அரசு எழுதுபொருள் அலுவலகமானது, 1953–ஆம் ஆண்டு ஜூலை முதல் இராஜாஜி சாலை, சென்னை–1–ல் செயல்பட்டு வருகிறது.

அ) அரசு எழுதுபொருள் அலுவலகமானது துணை இயக்குநரின் தலைமையில் ஒரு உதவி இயக்குநர், ஒரு உதவிப் பணி மேலாளர், அமைச்சுப் பணியாளர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் அடிப்படை பணியாளர்கள் என மொத்தம் 74 பணியாளர்களுடன் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசுத் துறைகளுக்குத் தேவையான காகிதங்கள், நகல் எடுக்கும் காகிதங்கள், எழுதுபொருட்கள் மற்றும் கோப்பு அட்டைகள் ஆகியவற்றை தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிச் சட்டம்–1998 மற்றும் 2000–ஆம் ஆண்டு விதிகளின்படி, கொள்முதல் செய்து இருப்பில் வைத்து ஆண்டு தேவைப் பட்டியலின் அடிப்படையில் அலுவலகங்களுக்கு கட்டணம் ஏதுமின்றியும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை உள்ளிட்ட 67 அலுவலகங்களுக்கு கட்டணத்தின்



அடிப்படையிலும், எழுதுபொருட்கள் விநியோகிக்கும் அலுவலகமாகச் செயலாற்றி வருகிறது.

ஆ) மக்களவை தேர்தல், தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் மற்றும் உள்ளாட்சி தேர்தலுக்குத் தேவைப்படும் எழுதுபொருட்கள் மற்றும் பல்வகைப் பொருட்களை கொள்முதல் செய்து அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கும் விநியோகிக்கும் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இ) இவை தவிர, 2022–2023–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, அரசு எழுதுபொருள் அலுவலகக் கட்டடத்தினை புனரமைப்பதற்கு ஏதுவாக ரூ.1,25,00,000/– (ரூபாய் ஒரு கோடியே இருபத்து ஐந்து இலட்சம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 13.02.2023 முதல் பொதுப் பணித் துறை மூலம் புனரமைக்கும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**3) அரசு மைய அச்சகம், சென்னை.**

அ) டிசம்பர் திங்கள் 1831–ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட, அரசு மைய அச்சகமானது 1888–ஆம் ஆண்டு முதல் தங்க சாலையில் உள்ள கட்டடத்திற்கு (Mint Building) மாற்றப்பட்டு 23.05.2017

முதல் புதிய கட்டடத்தில் அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய அச்சு இயந்திரங்களுடன் செயல்பட்டு வருகிறது. இவ்வச்சகமானது பணி மேலாளர்–I தலைமையின் கீழ் நிருவாகப் பிரிவு, கணக்குப் பிரிவு, தொழில்நுட்பப் பிரிவு, சுகாதாரம் மற்றும் தொழிலாளர் நலப் பிரிவுகள் என மொத்தம் 628 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுடன் செயல்பட்டு வருகிறது.

பணி மேலாளர்–I, பணி மேலாளர்–II, துணைப் பணி மேலாளர்கள்–3, உதவிப் பணி மேலாளர்கள்–11 தொழில்நுட்ப பிரிவிலும், உதவி இயக்குநர்கள்–3 நிருவாகம் மற்றும் அமைச்சுப் பிரிவிலும், உதவிப் பொறியாளர்–1 இயந்திரங்கள் மற்றும் கட்டடங்கள் பராமரிப்பு பிரிவிலும், காவல் துறை துணைக் கண்காணிப்பாளர்–1 பாதுகாப்பு பிரிவிலும், உதவிக் கணக்கு அலுவலர்–1 வரவு–செலவு மற்றும் கணக்குப் பிரிவிலும், உதவித் தொழிலாளர் நல அலுவலர்–1 மற்றும் சுகாதாரப் பிரிவில் சுகாதார ஆய்வாளர்–1 தொழிலாளர் நலப் பிரிவிலும் பணிபுரிந்து வருகின்றனர்.

இவ்வச்சகத்தில் செயலாக்கம் செய்யப்படும் அச்சுப் பணிகள் அதிகரித்துள்ளதால் பாதுகாப்புப் பணிகளுக்காக, காவல் துறையிலிருந்து ஒரு துணை



காவல் கண்காணிப்பாளரும், தொழிலாளர் நலன் பேண ஒரு உதவி தொழிலாளர் நல அலுவலரும், அச்சக வளாகத்தில் சுத்தம் மற்றும் சுகாதாரம் பேண, பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து துறையிலிருந்து சுகாதார ஆய்வாளர் ஒருவரும் மாற்றுப் பணியில் பணிபுரிகின்றனர்.

ஆ) அரசிடமிருந்து பெறப்படும் அனைத்து விதமான கமுக்கப் பணிகளை வரவு–செலவு மற்றும் அதிரகசியப் பிரிவுகளில் மிகுந்த பாதுகாப்புடனும், இரகசிய தன்மையுடனும் அச்சிட்டு வழங்கிட இவ்வச்சகமானது ஞாயிற்றுக் கிழமை உட்பட வாரம் முழுவதும் செயல்பட்டு வருகிறது.

இ) மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர்களுக்கு தேவையான கடிதத்தாள் கற்றை (Letter Pad), நிதிநிலை அறிக்கை, அனைத்து துறைகளுக்கான மானியக் கோரிக்கை, கொள்கை விளக்கக் குறிப்புகள், பல்கலைக்கழக தேர்வுகளுக்கான விடைத்தாள்கள், 10–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரையிலான அரசுத் தேர்வுத் துறையின் விடைத் தாள்கள், நாட்காட்டிகள், நாட்குறிப்பேடுகள் மற்றும் அகல துணி வேய்ந்த காகித உறைகள் ஆகியவற்றை குறித்த நேரத்தில் உயரிய தரத்துடன்

நவீன அச்சு இயந்திரங்களைக் கொண்டு செயலாக்கம் செய்யப்பட்டு வருகிறது.

ஈ) **அரசு மைய அச்சகத்தில் அச்சடிக்கப்பட்ட** படிவங்கள், பதிவேடுகள், அரசிதழ்கள் மற்றும் நாட்காட்டிகள் ஆகியவற்றை சம்மந்தப்பட்ட அலுவலகங்களுக்கு உரிய காலத்தில் அனுப்பி வைக்கவும், அரசு ஆவணங்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும் 2021–2022–ஆம் நிதியாண்டில், முதன் முதலாக இத்துறைக்கென ரூ.18,00,000/– இலட்சம் (ரூபாய் பதினெட்டு இலட்சம் மட்டும்) மதிப்பில் சுமையூர்தி (பதிவெண்.TN 01 G 8902) ஒன்று கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

உ) **2022–2023–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்புகளின்படி அரசு மைய அச்சகத்திற்கு கொள்முதல் செய்து நிறுவப்பட்ட இயந்திரங்களின் விபரங்கள்:**

(i) குறைந்த காலம் மற்றும் செலவில், குறைந்த எண்ணிக்கையிலும், பல வண்ணங்களிலும் வழுவழுப்பான தாள்கள், அட்டைகள் மற்றும் மென் தகடுகள் ஒட்டப்பட்ட அச்சுத் தாள்களில் அச்சுப் பணிகள் செயலாக்கத்திற்காக நான்கு வண்ண டோனர் அடிப்படையிலான எண்ணிம உற்பத்தி அச்சுப்பொறி (Four Colour Toner Based Digital Production Printer) ஒன்று கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

(ii) குறைந்த கால அவகாசத்தில், குறைந்த செலவில் குறைவான மனித ஆற்றலைக்கொண்டு அதிக பக்கங்கள் மற்றும் மாறுபட்ட தரவுகளை (Variable Data) உள்ளடக்கிய அச்சுப் பணிக்கென கருப்பு வெள்ளை எண்ணிம மை தெளிப்பு உற்பத்தி அச்சுப் பொறி இயந்திரம் (Black and White Inkjet Digital Production Printer) ஒன்று கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

(iii) குறைந்த கால அவகாசத்தில் குறைந்த மனித ஆற்றலுடன் பல்வேறு நிலையிலான அச்சு செயலாக்க நடைமுறைகளை தவிர்த்து, பல வகையான காகிதங்களில், மாறுபடும் தரவுகளுடன் (Variable Data) பல வண்ணங்களில் அச்சு செயலாக்கம் செய்வதற்கு, நான்கு வண்ண எண்ணிம மை தெளிப்பு உற்பத்தி அச்சுப்பொறி இயந்திரங்கள் (Four Colour Digital Inkjet Production Printer) 2 எண்ணிக்கையில் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

(iv) அரசு அச்சகங்களில் செயலாக்கப்படும் அச்சு பணிகளின் தரத்தை உறுதி செய்யும் வகையில் காகிதம் மற்றும் அச்சுப் பொருட்களை தரப் பரிசோதனை செய்ய அரசு மைய அச்சகத்தில் ரூ.1,08,72,000/- (ரூபாய் ஒரு கோடியே எட்டு இலட்சத்து எழுபத்து இரண்டாயிரம் மட்டும்) மதிப்பில் டி65 ஒளியூட்டு வசதி மற்றும் கருவிகளுடன் 1140 சதுர அடியில் ஓர் ஆய்வகக் கட்டட கட்டுமானப் பணிகள் பொதுப் பணித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(v) 2023-2024–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்புகளின்படி அரசு மைய அச்சகத்திற்கு அவசரப் பணிகள் குறுந்தகடு வடிவில் பெறப்பட்டு அச்சுத் தகடு தயாரிப்பதற்கு ஏதுவாக நவீன இயந்திரங்களின் பயன்பாடுகள் அதிகரித்துள்ளதாலும் பழைய தொழில்நுட்பமான அச்சுத் தகடுகள் சந்தையில் தயாரிப்பது அரிதாகிவிட்டதாலும் ரூ.2,50,00,000/- (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் ஒரு Thermal CTP இயந்திரம் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.



**ஊ) அரசு மைய அச்சகத்தில் அச்சிடப்படும் முன்னுரிமை பணிகள்:**

மாண்புமிகு ஆளுநர் அவர்களின் உரை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உரை, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் நிதிநிலை அறிக்கை குறித்த உரை, மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் வேளாண் நிதிநிலை அறிக்கை குறித்த உரை, விரிவான மானியக் கோரிக்கை மற்றும் வரவு-செலவு ஆவணங்கள், அனைத்து அரசுத் துறைகளுக்கான கொள்கை விளக்க குறிப்பு மற்றும் செயல்முறைத் திட்டம், அதிரகசியப் பணிகள், சட்டமன்ற பல்வேறு குழுக்களின் அறிக்கைகள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் நடவடிக்கை குறிப்புகள் ஆகியவை அச்சிடப்பட்டு வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் அறிவிக்கைகள், படிவங்கள் மற்றும் வாக்குச் சீட்டுகள், பொதுத் தேர்தல் தொடர்பான அறிவிக்கைகள், படிவங்கள், புத்தகங்கள், கையேடுகள், சிறப்பு அட்டைகள், பல்வேறு அளவிலான உறைகள், வாக்குச்சீட்டுகள், பொது மக்களுக்கான வெளியீடுகள்

மற்றும் படிவங்கள் ஆகியவை அச்சிடப்பட்டு வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு அரசிதழ்கள், சட்ட விதித் தொகுப்புகள் மற்றும் நடைமுறை நூல்கள், தமிழ்நாடு மாநிலக் கணக்காய்வுத் தலைவரின் அறிக்கைகள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய வெளியீடுகள் மற்றும் பல வண்ணங்களில் ஆண்டு அறிக்கைகள், அரசு தொழில்நுட்ப கல்வித் துறை மற்றும் அரசுத் தேர்வுகள் துறை நடத்தும் தேர்வுகளுக்கான விடைத் தாள்கள் மற்றும் துணி வேய்ந்த உறைகள், நிலைப்படுத்தப்பட்ட / நிலைப்படுத்தப்படாத படிவங்கள் மற்றும் பதிவேடுகள், கால முறை வெளியீடுகள், மக்கள் நல்வாழ்வு, சமூக நலம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைகளுக்கான படிவங்கள், பல்கலைக்கழகங்களுக்கான விடைத் தாள்கள், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறைக்கான பலவகை புத்தகங்கள், இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறைக்குத் தேவையான புற நோயாளிகளுக்கான அட்டைகள் மற்றும் மருத்துவ புத்தகங்கள் ஆகியவை அச்சிடப்பட்டு வழங்கப்படுகிறது.



இவை தவிர, சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்கள் அச்சிடப்படுகின்றன.

**4) அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை.**

1949–ஆம் ஆண்டு முதல் இயங்கி வரும் இவ்வச்சகமானது 1883–ஆம் ஆண்டு புதுக்கோட்டை சமஸ்தானத்தின் கீழ் தொடங்கப்பட்ட அச்சகமாகும். துணைப் பணி மேலாளர் ஒருவரை அலகு தலைவராகக் கொண்டு 79 பணியாளர்களுடன் இவ்வச்சகம் செயல்பட்டு வருகிறது.

இக்கிளை அச்சகத்தில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, ஓய்வூதியத் துறை, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை, காவல் துறை ஆகிய துறைகளுக்குத் தேவையான 290 வகையான நிலைப்படுத்தப்பட்ட / நிலைப்படுத்தப்படாத படிவங்கள் மற்றும் பதிவேடுகள் ஆகியவை ஆண்டுதோறும் தேவைக்கேற்ப அச்சிடப்பட்டு கட்டணமின்றி வழங்கப்படுகிறது.

மேலும், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் ஆகிய

மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் செயலாக்கப்படுகின்றன.

2022–2023–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, இவ்வச்சகத்திற்கு குறைந்த கால அவகாசத்தில், குறைந்த செலவில் குறைவான மனித ஆற்றல் கொண்டு அதிக பக்கங்கள் மற்றும் மாறுபட்ட தரவுகளை (Variable Data) உள்ளடக்கிய அச்சுப் பணிக்கென கருப்பு வெள்ளை எண்ணிம மை தெளிப்பு உற்பத்தி அச்சுப்பொறி இயந்திரம் (Black and White Inkjet Digital Production Printer) கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

2023–2024–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, இவ்வச்சகத்தில் உள்ள இயந்திரப்பிரிவு, புத்தகம் கட்டும் பிரிவு மற்றும் அனுப்புகைப் பிரிவுகளில் அச்சிட்ட காகிதங்களை ஒரு கட்டடத்திலிருந்து மற்றொரு கட்டடத்திற்கு எளிதாக ஏற்றி செல்ல ஹைட்ராலிக் நகர் அடிமேடை (Hydraulic Pallet Trolley) கொள்முதல் செய்து பயன்பாட்டில் உள்ளது.

2023–2024–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி,



சென்னை வெளியீடுகள் விற்பனை நிலையம், மதுரை மற்றும் திருச்சி துணை விற்பனை நிலையங்களுக்கு பொதுமக்கள் சென்று வர ஏற்படும் கால விரயம் மற்றும் பொருள் விரயம் தவிர்க்கப்படுவதற்காக, பொது மக்களின் விருப்பத்தின் பேரில் இவ்வச்சகத்தில் 26.04.2023 முதல் தங்கள் பெயரினை திருத்தம் / மாற்றம் செய்ய விண்ணப்பிக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**5) அரசு கிளை அச்சகம், விருத்தாசலம்.**

1961–ஆம் ஆண்டு துவங்கப்பட்ட இக்கிளை அச்சகம், 1981–ஆம் ஆண்டு முதல் சொந்தக் கட்டடத்தில், துணைப் பணி மேலாளர் தலைமையில், அமைச்சுப் பணியாளர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் அடிப்படை பணியாளர்கள் என மொத்தம் 84 பணியாளர்களுடன் செயல்பட்டு வருகிறது.

பொதுப் பணித் துறை, வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, தொழில் துறை, வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை ஆகிய துறைகளுக்குத் தேவையான 369 வகையான நிலைப்படுத்தப்பட்ட / நிலைப்படுத்தப்படாத படிவங்கள் மற்றும் பதிவேடுகள் அச்சிடப்பட்டு

ஆண்டுத் தேவைப் பட்டியல் அடிப்படையில் விநியோகிக்கப்படுகின்றன.

மேலும் கடலூர், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர், விழுப்புரம், திருவண்ணாமலை மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் அச்சிடப்படுகின்றன.

2022–2023–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, இவ்வச்சகத்திற்கு குறைந்த கால அவகாசத்தில், குறைந்த செலவில் குறைவான மனித ஆற்றலைக் கொண்டு அதிக பக்கங்கள் மற்றும் மாறுபட்ட தரவுகளை (Variable Data) உள்ளடக்கிய அச்சுப் பணிக்கென கருப்பு வெள்ளை எண்ணிம மை தெளிப்பு உற்பத்தி அச்சுப்பொறி இயந்திரம் (Black and White Inkjet Digital Production Printer) கொள்முதல் செய்து பயன்பாட்டில் உள்ளது.

2023–2024–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, இவ்வச்சகத்தில் உள்ள வெப் ஆப்செட் இயந்திரங்களில் அச்சிட பயன்படும் காகித உருளையை ஏற்றும் ஹைட்ராலிக் தள்ளுவண்டி



(Hydraulic Reel Loading Trolley) கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

2023–2024–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, சென்னை வெளியீடுகள் விற்பனை நிலையம், மதுரை மற்றும் திருச்சி துணை விற்பனை நிலையங்களுக்கு பொதுமக்கள் சென்று வர ஏற்படும் கால விரயம் மற்றும் பொருள் விரயம் தவிர்க்கப்படுவதற்காக, பொதுமக்களின் விருப்பத்தின் பேரில் இவ்வச்சகத்தில் தங்கள் பெயரினை திருத்தம் / மாற்றம் செய்ய விண்ணப்பிக்கும் வசதி 26.04.2023 முதல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**6) அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி.**

1965–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் இருபதாம் நாள், திருச்சிராப்பள்ளி அரியமங்கலம் தொழிற்பேட்டையில் துவங்கப்பட்ட இவ்வச்சகம், 1990–ஆம் ஆண்டு முதல் துவாக்குடி, சிட்கோ வளாகத்தில், சொந்த கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இவ்வச்சகத்தில் துணைப் பணி மேலாளர் தலைமையின் கீழ், உதவிப் பணி மேலாளர், அமைச்சுப் பணியாளர்கள், தொழில் நுட்ப பணியாளர்கள் மற்றும் அடிப்படை

பணியாளர்கள் என மொத்தம் 96 பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

காவல் துறை, சிறைத் துறை மற்றும் அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் தேவையான பொதுப் படிவங்கள், தன் பதிவேடுகள் உட்பட 126 வகையான நிலைப்படுத்தப்பட்ட / நிலைப்படுத்தப்படாத படிவங்கள் மற்றும் பதிவேடுகள் ஆகியவை அச்சிடப்பட்டு ஆண்டுதோறும் தேவைப் பட்டியலின் அடிப்படையில் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

மேலும், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், கரூர் மற்றும் அரியலூர் ஆகிய மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் அச்சிடப்படுகின்றன.

பொதுமக்கள் தங்கள் பெயரினை திருத்தம் / மாற்றம் செய்யும் வசதி இங்கு உள்ள வெளியீடுகள் விற்பனை நிலையத்தில் உள்ளது.

2022–2023–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, இவ்வச்சகத்திற்கு குறைந்த கால அவகாசத்தில், குறைந்த செலவில் குறைவான மனித ஆற்றலைக் கொண்டு அதிக பக்கங்கள் மற்றும் மாறுபட்ட தரவுகளை (Variable Data) உள்ளடக்கிய அச்சுப் பணிக்கென கருப்பு வெள்ளை எண்ணிம மை



தெளிப்பு உற்பத்தி அச்சுப்பொறி இயந்திரம் (Black and White Inkjet Digital Production Printer) கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

2023–2024–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, இவ்வச்சகத்தில் உள்ள இயந்திரப் பிரிவு, புத்தகம் கட்டும் பிரிவு மற்றும் அனுப்புகை பிரிவுகளில் அச்சிட்ட காகிதங்களை ஒரு கட்டடத்திலிருந்து மற்றொரு கட்டடத்திற்கு எளிதாக ஏற்றி செல்ல ஹைட்ராலிக் நகர் அடிமேடை (Hydraulic Pallet Trolley) கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**7) அரசு கிளை அச்சகம், சேலம்.**

1966–ஆம் ஆண்டு சேலம் குகைப் பகுதியில் தொடங்கப்பட்ட இவ்வச்சகம், பின்னர், ஐந்து சாலையில் உள்ள "சிட்கோ" தொழிற்பேட்டையில் 1986–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் ஆறாம் நாள் முதல் சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

அரசுத் தேர்வுகள் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, கருவூலம் மற்றும் கணக்குத் துறை, காவல் துறை மற்றும் அரசுத் துறைகளின் பயன்பாட்டிற்குத் தேவைப்படும் 146 வகையான நிலைப்படுத்தப்பட்ட / நிலைப்படுத்தப்படாத

படிவங்கள் ஒவ்வொரு ஆண்டின் தேவைக்கேற்ப அச்சிட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

துணைப் பணி மேலாளர் தலைமையின் கீழ், அமைச்சுப் பணியாளர்கள், தொழில்நுட்ப பணியாளர்கள் மற்றும் அடிப்படைப் பணியாளர்கள் என மொத்தம் 112 பணியாளர்களுடன் இவ்வச்சகம் செயல்பட்டு வருகின்றது.

சேலம், நாமக்கல், ஈரோடு, திருப்பூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

2022–2023–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, இவ்வச்சகத்திற்கு குறைந்த கால அவகாசத்தில், குறைந்த செலவில் குறைவான மனித ஆற்றலைக் கொண்டு அதிக பக்கங்கள் மற்றும் மாறுபட்ட தரவுகளை (Variable Data) உள்ளடக்கிய அச்சுப் பணிக்கென கருப்பு வெள்ளை எண்ணிம மை தெளிப்பு உற்பத்தி அச்சுப்பொறி இயந்திரம் (Black and White Inkjet Digital Production Printer) கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.



**2023–2024–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்புகளின்படி கொள்முதல் செய்யப்பட்ட இயந்திரங்களின் விவரம்:**

i. இவ்வச்சகத்தில் உள்ள வெப் ஆப்செட் இயந்திரங்களில் சிரமமின்றி, காகித உருளைகளை ஏற்றி, தாங்கி பிடிக்க நவீன வசதியுடன் கூடிய காற்று அடைப்பான் முறையில் செயல்படும் நியூமேடிக் தண்டுகள் (Pneumatic Shaft) கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

ii. வெப் ஆப்செட் இயந்திரங்களில் அச்சிட பயன்படும் காகித உருளைகளை எளிதாக கையாண்டு இயந்திரத்தில் பொருத்துவதற்கு காகித உருளையை ஏற்றும் ஹைட்ராலிக் தள்ளுவண்டி (Hydraulic Reel Loading Trolley) கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

iii. இவ்வச்சகத்தில் உள்ள இயந்திரப் பிரிவு, புத்தகம் கட்டும் பிரிவு மற்றும் அனுப்புகை பிரிவுகளில் அச்சிட்ட காகிதங்களை ஒரு கட்டடத்திலிருந்து மற்றொரு கட்டடத்திற்கு எளிதாக ஏற்றி

செல்ல ஹைட்ராலிக் நகர் அடிமேடை (Hydraulic Pallet Trolley) கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

iv. சென்னை வெளியீடுகள் விற்பனை நிலையம், மதுரை மற்றும் திருச்சி துணை விற்பனை நிலையங்களுக்கு பொதுமக்கள் சென்று வர ஏற்படும் கால விரயம் தவிர்க்கப்படுவதற்காக, பொது மக்களின் விருப்பத்தின் பேரில் இக்கிளை அச்சகத்தில் தங்கள் பெயரினை திருத்தம் / மாற்றம் செய்ய விண்ணப்பிக்கும் வசதி 26.04.2023 முதல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**8) அரசு கிளை அச்சகம், மதுரை.**

1976–ஆம் ஆண்டு துவங்கப்பட்ட இக்கிளை அச்சகம், மதுரை கோ. புதூரில், சொந்தக் கட்டடத்தில் துணைப் பணி மேலாளர் தலைமையின் கீழ், 2 உதவிப் பணி மேலாளர்கள், 1 உதவி இயக்குநர், அமைச்சுப் பணியாளர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் அடிப்படை பணியாளர்கள் என மொத்தம் 216 பணியாளர்களுடன் செயல்பட்டு வருகிறது.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, காவல் துறை, நீதித் துறை, மருத்துவம் மற்றும் மக்கள்



நல்வாழ்வுத் துறை, வணிகவரி மற்றும் பதிவுத் துறைகளுக்குத் தேவையான 211 வகையான நிலைப்படுத்தப்பட்ட / நிலைப்படுத்தப்படாத படிவங்கள் மற்றும் பதிவேடுகள் அச்சிடப்பட்டு ஆண்டு தோறும் தேவைப் பட்டியலின்படி இவ்வச்சகத்தின் மூலம் வழங்கப்படுகிறது.

மேலும், மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம், திண்டுக்கல், தேனி, விருதுநகர், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் அச்சிடப்பட்டு வழங்கப்படுகிறது. பொதுமக்கள் தங்கள் பெயரினை திருத்தம் / மாற்றம் செய்யும் வசதி இங்குள்ள வெளியீடுகள் விற்பனை நிலையத்தில் உள்ளது.

2022–2023–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, இவ்வச்சகத்திற்கு குறைந்த கால அவகாசத்தில், குறைந்த செலவில், குறைவான மனித ஆற்றலைக் கொண்டு அதிக பக்கங்கள் மற்றும் மாறுபட்ட தரவுகளை (Variable Data) உள்ளடக்கிய அச்சுப் பணிக்கென கருப்பு வெள்ளை எண்ணிம மை தெளிப்பு உற்பத்தி அச்சுப்பொறி இயந்திரம் (Black and

White Inkjet Digital Production Printer) கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**2023-2024-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்புகளின்படி, கொள்முதல் செய்து நிறுவப்பட்ட இயந்திரங்களின் விவரங்கள்:**

i. வெப் ஆப்செட் இயந்திரங்களில் சிரமமின்றி காகித உருளையை ஏற்றி தாங்கி பிடிக்க நவீன வசதியுடன் கூடிய காற்று அடைப்பான் முறையில் செயல்படும் நியூமேடிக் தண்டுகள் (Pneumatic Shaft) கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

ii. இவ்வச்சகத்தில் உள்ள இயந்திரப் பிரிவு, புத்தகம் கட்டும் பிரிவு மற்றும் அனுப்புகை பிரிவுகளில் அச்சிட்ட காகிதங்களை ஒரு கட்டடத்திலிருந்து மற்றொரு கட்டடத்திற்கு எளிதாக ஏற்றி செல்ல ஹைட்ராலிக் நகர் அடிமேடை (Hydraulic Pallet Trolley) கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

iii. இவ்வச்சகத்தில் தேர்தல் துறை, வருவாய்த் துறை, விதைச் சான்றட்டைகள் மற்றும் பொதுவான பணிகள், நிலைப்படுத்தப்படாத பதிவேடுகள் / படிவங்கள் ஆகிய பணிகளை குறுகிய காலத்தில் உடனடியாக செயலாக்கம் செய்து அனுப்புகை செய்ய வேண்டியுள்ளதால், பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதி 10 digit கொண்ட கையினால் எண்களிடும் இயந்திரம் (Hand Numbering Machine) கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.



**5. அரசு வெளியீடுகள் விற்பனை நிலையங்கள்.**

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரக வளாகத்தில் செயல்பட்டு வரும் அரசு வெளியீடுகள் விற்பனை நிலையத்தில், உதவி இயக்குநரின் நிருவாகக் கட்டுப்பாட்டில் இத்துறையின் மூலம் அச்சடிக்கப்பட்ட அரசு வெளியீடுகள், விதிப் புத்தகங்கள், நடைமுறை நூல்கள் மற்றும் ஒன்றிய அரசின் சட்டப் புத்தகங்களுடன் அரசு பணியாளர்களுக்கான பணிப் பதிவேடுகளும் விற்பனை செய்யப்படுகின்றன.

2023-2024-ஆம் ஆண்டு அரசிதழ்கள், அரசு வெளியீடுகள், துறை சார்ந்த புத்தகங்கள் மற்றும் இந்திய அரசியலமைப்பு புத்தகங்கள் ஆகியவற்றை விற்பனை செய்ததன் மூலம் ரூ.5,70,657/- (ரூபாய்

ஐந்து இலட்சத்து எழுபதாயிரத்து அறுநூற்று ஐம்பத்து ஏழு மட்டும்) மற்றும் தனியார் அறிவிக்கைகள் வெளியிடப்பட்டதன் மூலம் ரூ.25,76,286/- (ரூபாய் இருபத்து ஐந்து இலட்சத்து எழுபத்து ஆறாயிரத்து இருநூற்று எண்பத்து ஆறு மட்டும்) என ஆக மொத்தம் ரூ.31,46,943/- (ரூபாய் முப்பத்தொரு இலட்சத்து நாற்பத்தாறாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்து மூன்று மட்டும்) அரசுக்கு வருவாய் ஈட்டப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளாக திருச்சி மற்றும் மதுரையில் உள்ள கிளை அச்சக வளாகங்களில் உள்ள துணை விற்பனை நிலையங்கள், மத்திய மற்றும் தென்மாவட்டங்களும் உரிய காலத்தில் விரைவாகப் பயன்பெறும் வகையில் இயங்கி வருகின்றன.

பொதுமக்கள் தங்கள் பெயரினை திருத்தம் / மாற்றம் செய்வது குறித்த அரசிதழ்கள், பணிப் பதிவேடுகள், சட்டத் தொகுப்புகள், விதிகள் மற்றும் விதித் தொகுப்புகள், அரசு அலுவலகங்களின் தொலைபேசி கையேடுகள், அரசிதழ்கள் ஆகியவை



அரசுப் பணியாளர்கள் மற்றும் பொதுமக்களின் தேவைகளுக்காக விற்பனை செய்யப்படுகின்றன.

**6. பொதுமக்கள் தங்கள் பெயரினை திருத்தம் / மாற்றம் செய்தல்.**

பொதுமக்கள் தங்கள் பெயரினை திருத்தம் / மாற்றம் செய்தல் மற்றும் மதமாற்றத்தினால் ஏற்படும் பெயர் மாற்றம், அரசு அறிவிக்கைகள் மற்றும் அதன் தொடர்பான பணிகள் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரக வளாகத்தில் உள்ள அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம், மதுரை, திருச்சி, சேலம், புதுக்கோட்டை மற்றும் விருத்தாசலம் அரசு கிளை அச்சகங்களில் இயங்கி வரும் துணை விற்பனை நிலையங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், பெயர் திருத்தம் / மாற்றம் தொடர்பான விண்ணப்பப் படிவங்களை வலைதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்தும் பொதுமக்கள் பயனடைந்து வருகின்றனர். பெயர் திருத்தம் / மாற்றம் செய்து

ஆங்கிலத்தில் அரசிதழில் வெளியீடு செய்ய **ரூ.750/-ம்,** பெயர் திருத்தம் / மாற்றம் செய்து தமிழில் அரசிதழில் வெளியீடு செய்ய **ரூ.150/-ம்** கட்டணமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கட்டணம் ஏதுமின்றி, மூன்றாம் பாலினத்தவர் பெயர் திருத்தம் / மாற்றம் குறித்து அரசிதழில் வெளியீடு செய்யப்படுகின்றன.

கடந்த ஆண்டில் 29,095 நபர்களுக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டு தமிழ்நாடு அரசிதழ்களில் வெளியிடப்பட்டுள்ளன.

2023-2024-ஆம் ஆண்டில் பெயர் திருத்தம் / மாற்றம் தொடர்பான விபரங்களை அரசிதழில் வெளியிடப்பட்டதன் மூலம் சென்னை விற்பனை நிலையத்தில் ரூ.92,29,785/- (ரூபாய் தொண்ணூற்று இரண்டு இலட்சத்து இருபத்து ஒன்பதாயிரத்து எழுநூற்று எண்பத்தைந்து மட்டும்), மதுரை துணை விற்பனை நிலையத்தில் ரூ.26,07,842/-(ரூபாய் இருபத்து ஆறு இலட்சத்து ஏழாயிரத்து எண்ணூற்று



நாற்பத்து இரண்டு மட்டும்), திருச்சி துணை விற்பனை நிலையத்தில் ரூ.11,51,149/- (ரூபாய் பதினொறு இலட்சத்து ஐம்பத்து ஓராயிரத்து நூற்று நாற்பத்தொன்பது மட்டும்), சேலம் கிளை அச்சகத்தில் ரூ.21,66,577/- (ரூபாய் இருபத்தொரு இலட்சத்து அறுபத்து ஆறாயிரத்து ஐநூற்று எழுபத்து ஏழு மட்டும்), புதுக்கோட்டை கிளை அச்சகத்தில் ரூ.3,24,105/- (ரூபாய் மூன்று இலட்சத்து இருபத்து நான்காயிரத்து நூற்று ஐந்து மட்டும்) மற்றும் விருத்தாசலம் கிளை அச்சகத்தில் ரூ.3,09,035/- (ரூபாய் மூன்று இலட்சத்து ஒன்பதாயிரத்து முப்பத்தைந்து மட்டும்) என ஆக மொத்தம் ரூ.1,57,88,493/- (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்து ஏழு இலட்சத்து எண்பத்து எட்டாயிரத்து நானூற்று தொண்ணூற்று மூன்று மட்டும்) அரசுக்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

## 7. அரசு அச்சகங்களில், 2023–2024–ஆம் ஆண்டில் அரசுத் துறைகளுக்கு அச்சிட்டு வழங்கப்பட்ட பணிகளின் விவரம்

i. நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் / பதிவேடுகள்/ உறைகள்

| வ. எண் | துறை அலுவலகங்கள் விவரம் | படிவங்களின் எண்ணிக்கை | புத்தகங்களின் எண்ணிக்கை | உறைகள் |
|---|---|---|---|---|
| 1 | நீதித் துறை | 7,38,250 | 7,426 | 16,000 |
| 2 | மாநில சட்டமன்றம் | 14,97,100 | 500 | – |
| 3 | காவல் துறை | 9,62,110 | 2,16,123 | 2,75,000 |
| 4 | மருத்துவத் துறை | 4,65,77,750 | 1,20,589 | 1,96,400 |
| 5 | தொழில்நுட்ப கல்வி இயக்ககம் | 47,95,020 | 4,35,000 | – |
| 6 | பொதுப் பணித் துறை | 1,61,000 | 15,43,024 | – |
| 7 | பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 8,13,250 | – | – |
| 8 | ஆதிதிராவிடர் நலத் துறை | 12,08,471 | 12,186 | – |
| 9 | வருவாய்த் துறை | 1,69,24,280 | 69,000 | 5000 |
| 10 | கருவூலப் படிவங்கள் மற்றும் பதிவேடுகள் | 3,52,500 | 1,25,250 | – |
| 11 | தலைமைச் செயலகப் பணிகள் | 1,55,000 | – | – |



| வ. எண் | துறை அலுவலகங்கள் விவரம் | படிவங்களின் எண்ணிக்கை | புத்தகங்களின் எண்ணிக்கை | உறைகள் |
|---|---|---|---|---|
| 12 | உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை | 4,01,500 | 586 | – |
| 13 | வேளாண்மைத் துறை | 2,000 | 4,500 | 8,000 |
| 14 | கால்நடை பராமரிப்புத் துறை | 4,000 | 11,090 | – |
| 15 | தீயணைப்புத் துறை | 3,500 | 27,104 | – |
| 16 | வனத் துறை | 2,000 | 6,600 | – |
| 17 | சுகாதாரத்துறை | 12,22,000 | – | – |
| 18 | தேர்வுத்துறை | 4,52,32,400 | – | 1,64,000 |
| 19 | எழுதுபொருள் அலுவலகம் | 70,000 | 6,725 | 14,20,000 |
| 20 | வணிகவரித் துறை | 2,500 | 1,058 | – |
| 21 | புள்ளியியல் துறை | 1,87,400 | 6,105 | – |
| 22 | தமிழ் வளர்ச்சித் துறை | 50,400 | 40,478 | 99,300 |
| 23 | கல்வித் துறை | 41,39,400 | 1,59,957 | 5,60,000 |
| 24 | தடய அறிவியல் துறை | 3,30,000 | 5,000 | – |
| 25 | போக்குவரத்துத் துறை | 66,000 | 15,400 | 15,00,000 |
| 26 | கொதிகலன் | – | 5,300 | – |
| | மொத்தம் | 12,58,97,831 | 28,19,001 | 42,43,700 |

## ii. நிலைப்படுத்தப்படாத படிவங்கள் / பதிவேடுகள்/ உறைகள்

| வ. எண் | விவரம் | படிவங்களின் எண்ணிக்கை | புத்தகங்களின் எண்ணிக்கை | உறைகள் | நாட்காட்டிகள் |
|---|---|---|---|---|---|
| 1 | மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் அலுவலகங்களுக்கு தேவையான கடிதத்தாள் கற்றை, வாழ்த்து அட்டைகள் மற்றும் கோப்பு அட்டைகள் | 3,20,000 | 1,070 | 1,54,320 | 60,660 |
| 2 | சட்டமன்ற நடவடிக்கை குறிப்புகள், அறிவிப்புகள் மற்றும் மக்கள் சாசனம் | – | 1,14,800 | – | – |
| 3 | மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களின் நாட்குறிப்பேடுகள் | – | – | – | 2,000 |
| 4 | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் | 26,900 | 2,00,000 | 60,000 | – |
| 5 | தேர்தல் துறை | 1,63,16,190 | 2,86,988 | 15,57,160 | – |
| 6 | முன்னாள் படை வீரர் நலத் துறை இயக்ககம் | 27,000 | 380 | – | – |
| 7 | காவல் துறை | – | 42,156 | 5,000 | – |
| 8 | மாநிலக் கணக்காய்வுத் தலைவர் அலுவலகம் | 33,000 | – | – | – |



| வ. எண் | விவரம் | படிவங்களின் எண்ணிக்கை | புத்தகங்களின் எண்ணிக்கை | உறைகள் | நாட்காட்டிகள் |
|---|---|---|---|---|---|
| 9 | தமிழ் வளர்ச்சித் துறை | – | – | – | – |
| 10 | நீதித் துறை | 32,89,400 | 18,994 | 42,450 | 43,500 |
| 11 | கப்பல் போக்குவரத்து | – | 10,000 | – | – |
| 12 | பொதுப் பணித் துறை | 300 | 6,280 | – | – |
| 13 | அரசு தேர்வுத்துறை | 25,73,450 | 52,55,500 | – | – |
| 14 | தேசிய மாணவர் படை (National Cadet Corps) | 20,000 | 10,400 | – | – |
| 15 | ஆதிதிராவிடர் நலத் துறை | 1,000 | – | – | – |
| 16 | தொழில்நுட்ப கல்வி இயக்ககம் | 6,00,000 | – | – | – |
| 17 | வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை | – | 2,000 | – | – |
| 18 | விதைச் சான்று அட்டைகள் | 63,45,350 | 30 | – | – |
| 19 | எழுதுபொருள் அலுவலகம் | 14,33,500 | – | – | – |
| 20 | அனைத்து அரசு அலுவலர்களுக்கான வெற்று உறைகள் | – | – | 33,000 | – |
| 21 | நீர் பகுப்பாய்வகம் | 16,150 | – | – | – |
| 22 | கல்வித் துறை | 93,91,000 | – | 78,000 | – |
| 23 | வேளாண்மை விற்பனைக்குழு | – | 2,000 | – | – |
| 24 | கலைஞர் மக்கள் சேவை முகாம் ரசீது | 15,000 | – | – | – |
| | **மொத்தம்** | **4,04,08,240** | **59,50,598** | **19,29,930** | **1,06,160** |

## 2023–2024–ஆம் ஆண்டில் அரசு அச்சகங்களில் அச்சிட்டு வழங்கப்பட்ட பல்கலைக்கழக பணிகளின் விவரம்

| வ. எண் | விவரம் | விடைத் தாள்கள் | புத்தகங்கள் | உறைகள் |
|---|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு திறந்த நிலை பல்கலைக்கழகம் | 1,56,400 | – | – |
| 2 | அண்ணாமலை பல்கலைக்கழகம் | 11,00,000 | – | – |
| 3 | அண்ணா பல்கலைக்கழகம் | 37,45,000 | – | – |
| 4 | அழகப்பா பல்கலைக்கழகம் | 12,00,000 | – | – |
| 5 | சென்னை பல்கலைக்கழகம் | 33,60,000 | – | – |
| 6 | பாரதிதாசன் பல்கலைக்கழகம் | 30,00,000 | – | – |
| 7 | தமிழ்நாடு ஆசிரியர் பல்கலைக்கழகம் | 22,00,000 | – | 2,30,000 |
| 8 | செவிலியர் பட்டயத் தேர்வு (Diploma in Nursing) | 62,104 | – | – |
| 9 | மருந்தியல் பட்டயத்தேர்வு (Diploma in Pharmacy) | 50,200 | – | – |
| | **மொத்தம்** | **1,48,73,704** | **–** | **2,30,000** |



## 2023–2024–ஆம் ஆண்டில் பல்கலைக்கழகப் பணிகளின் மூலம் ஈட்டப்பட்ட வருவாய்

| வ. எண். | பொருள் | அச்சுக் கட்டணம் (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | அண்ணா பல்கலைக்கழகம் | 12,11,50,558/– |
| 2. | அண்ணாமலை பல்கலைக்கழகம் | 4,14,30,960/– |
| 3. | திருவள்ளுவர் பல்கலைக்கழகம் | 4,845/– |
| 4. | தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் கழகம் | 1,67,01,038/– |
| 5. | தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகம் | 44,27,654/– |
| 6. | அழகப்பா பல்கலைக்கழகம் | 3,09,46,021/– |
| 7. | சென்னை பல்கலைக்கழகம் (மறு அச்சுக் கட்டணம்) | 1,02,02,496/– |
| 8. | பாரதிதாசன் பல்கலைக்கழகம் | 4,16,50,026/– |
| 9. | சென்னை பல்கலைக்கழகம் | 3,19,202/– |
| | **மொத்தம்** | **26,68,32,800/–** |

## 2023–2024–ஆம் ஆண்டு
## அரசுத் துறைகளிடமிருந்து பெறப்பட்ட
## அச்சுக் கட்டண விவரம்

| வ. எண் | துறை / நிறுவனம் | அச்சுக் கட்டணம் (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | கப்பல் போக்குவரத்து துறை | 6,24,597/– |
| 2. | சாலை போக்குவரத்து துறை | 1,97,651/– |
| 3. | இராஜீவ்காந்தி பொது மருத்துவமனை | 17,50,660/– |
| 4. | விதைச்சான்று இயக்ககம், சென்னை | 52,14,945/– |
| 5. | தமிழ்நாடு பாடநூல் கழகம் | 78,81,566/– |
| 6. | மருத்துவக்கல்வி இயக்ககம், கீழ்பாக்கம் | 31,88,589/– |
| 7. | தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, அயனாவரம் | 30,474/– |
| 8. | சேலம் விற்பனைக் குழு | 2,43,297/– |
| 9. | தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகம், சென்னை | 5,11,707/– |
| 10. | தமிழ்நாடு வேளாண் விற்பனை வாரியம், கிண்டி, சென்னை | 9,684/– |
| 11. | மத்திய மீன்வள கணக்கெடுப்பு அலுவலகம், இராயபுரம் | 80,320/– |
| 12. | தொழிலாளர் நலவாரியம், சென்னை | 7,273/– |
| 13. | பள்ளிக் கல்வித் துறை ஆசிரியர் தின கொடி | 5,97,057/– |
| 14. | ஆசிரியர் தேர்வு வாரியம் – CMRF | 22,364/– |
| 15. | தமிழ்நாடு உடல் உழைப்பு தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு நல வாரியம் ஆண்டறிக்கை | 1,21,845/– |
| 16. | ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி ஆணையரகம் | 5,49,765/– |
| 17. | மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை | 31,92,957/– |
| 18. | நெடுஞ்சாலைத் துறை | 12,13,363/– |
| 19. | மாநில ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து நிறுவனம், மறைமலை நகர் | 16,62,604/– |
| 20. | காவல் துறை | 20,88,366/– |
| 21. | விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்று இயக்ககம், கிண்டி | 70,67,215/– |
| 22. | மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழு, சேலம் | 31,702/– |
| 23, | தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் | 15,781/– |
| 24. | ஆதிதிராவிடர் நலத் துறை | 36,832/– |
| | மொத்தம் | 3,63,40,614/– |

## 8. தொழிலாளர் நலன்.

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் உள்ள அரசு அச்சகங்கள், அரசுக் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் தொழிற்சாலைகள் ஆகும். தொழிற்சாலைகள் சட்ட விதிமுறைக்குட்பட்டு அனைத்து விதிமுறைகளும், நடைமுறைகளும் அரசு அச்சகங்களில் பின்பற்றப்பட்டு வருகின்றன. அரசு அச்சகங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள், தொழிலாளர் நலச் சட்டங்களான 1947–ஆம் வருட தொழில் தகராறுகள் சட்டம், 1926–ஆம் வருட தொழிற்சங்க சட்டம், 1923–ஆம் வருட பணியாளர் இழப்பீட்டு சட்டம், 1972–ஆம் வருட தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம் மற்றும் இதர சட்டங்களின் கீழ் பயனடைந்து வருகின்றனர்.

இத்துறையில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலன் காத்திட, அரசு அச்சக நடைமுறை நூல் விதி 160–ன்படி தொழிலாளர் நலத் துறையில் இருந்து தொழிலாளர் உதவி ஆணையர் நிலையில் தொழிலாளர் நல அலுவலர் ஒருவரும், தொழிலாளர் துணை ஆய்வாளர் நிலையில் உதவி தொழிலாளர்



நல அலுவலர் ஒருவரும் மாற்றுப் பணியில் (Deputation) பணிபுரிந்து வருகின்றனர்.

இத்துறையில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனுக்காகவும் மற்றும் அச்சகங்களின் தூய்மையினைப் பராமரிக்கவும், அரசு அச்சக நடைமுறை நூல் விதி 159–ன்படி பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறையிலிருந்து ஒரு சுகாதார ஆய்வாளரும் பணிபுரிகிறார்.

**அ) தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் படிகள் (Allowances)**

1. 1923–ஆம் ஆண்டு பணியாளர்கள் இழப்பீடுச் சட்டப்படி விபத்து நஷ்ட ஈடு வழங்கப்படுகிறது.
2. தொழிற்சாலைகள் சட்டம் தொழில்நுட்ப பணியாளர்களுக்கு பொருந்துவதால், தொழிலாளர்களுக்கு சீருடை, தையல் கூலி மற்றும் இதர படிகள் வழங்கப்படுகிறது. பெண் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு வருடந்தோறும் இரு மேலங்கிகள் மற்றும் அதற்கான தையற்கூலி ரூ.700/–ம், ஆண் தொழில்நுட்ப பணியாளர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு

ஒருமுறை நான்கு ஜோடி சீருடைகள் மற்றும் அதற்கான தையற்கூலி ரூ.2,000/-மும் வழங்கப்பட்டு வருகிறது.

3. எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் பணிபுரியும் ஆண் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரு ஜோடி லெதர் ஷூ மற்றும் 2 ஜோடி காலுறைகள், பெண் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டிற்கும் ஒரு ஜோடி லெதர் காலணி வழங்கப்பட்டு வருகிறது.
4. ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை காவலர், மின் வினைஞர் மற்றும் செய்தியாளர்களுக்கு மழைக்கோட்டு வழங்கப்பட்டு வருகிறது.
5. அச்சகப் பணியாளர்களுக்கான சிற்றுண்டிப் படியாக ரூ.400/-ம், சலவைப் படியாக ரூ.200/-ம் மற்றும் இடர்படியாக ரூ.400/-ம் வழங்கப்பட்டு வருகிறது.

**ஆ) சிறப்பூதியம்**

அவசர மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த அச்சுப் பணிகளை ஞாயிற்றுக் கிழமை, விடுமுறை தினங்கள் மற்றும் நெருக்கடியான சூழ்நிலைகளில் வரவு-செலவு திட்டம் மற்றும் அதிரகசிய பிரிவில் பணிபுரியும் பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் முதுநிலை முதலாள் ரூ.300/-ம், தலைமை முதுநிலை முதலாள் ரூ.240/-ம், ஒழுங்கமைப்பாளர், இளநிலை முதலாள், முதுநிலை தனியச்சு வார்ப்புப் பணியாளர், இளநிலை வாசகர் ஆகியோருக்கு ரூ.210/-ம், இளநிலை புத்தகம் கட்டுநர், இயந்திர இயக்கி, அசல் படிப்பவர் ஆகியோருக்கு ரூ.180/-ம் மற்றும் கிடங்கு எழுத்தருக்கு ரூ.120/-ம் மாதந்தோறும் சிறப்பூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

**இ) மனமகிழ் மன்றம்**

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் அனைத்து அலுவலகங்களிலும் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பணிச் சுமையினால் ஏற்படும் மனச் சோர்வினை களையவும், பணியாளர்களின் பணித் திறனை மேம்படுத்திடவும் மனமகிழ் மன்றம் ஏற்படுத்தப்பட்டு யோகா மற்றும் தியானம் குறித்த பயிற்சி அளித்தல், கலை இலக்கிய பயிற்சிகள் அளித்தல், மாவட்ட அளவில் நடைபெறும்

விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெற ஆர்வமுள்ள பணியாளர்களை (ஆண் மற்றும் பெண் பணியாளர்கள்) அனுப்புதல், இதர விளையாட்டு போட்டிகள் நடத்துதல் ஆகியவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், விளையாட்டு மற்றும் உடல் நலன் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் விளையாட்டுப் போட்டிகள் நடத்திட தேவையான விளையாட்டுப் பொருட்கள் வாங்குவதற்கு ரூ.2,00,000/- மற்றும் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்க ரூ.1,00,000/- செலவிடப்படுகிறது. இதற்காக மனமகிழ் மன்றங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் ரூ.3,00,000/- (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**ஈ) தமிழ்நாடு அரசினர் அச்சகம் மற்றும் எழுதுபொருள் துறை தொழிலாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்.**

அரசு மைய அச்சகத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு அரசினர் அச்சகம் மற்றும் எழுதுபொருள் துறை தொழிலாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட் "A" வகையை சார்ந்தது. இதர 5 அரசு கிளை அச்சகங்களில் இயங்கி வரும் தமிழ்நாடு அரசினர்



அச்சகம் மற்றும் எழுதுபொருள் துறை தொழிலாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட் "B" வகையாகும்.

அரசு மைய அச்சகத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு அரசினர் அச்சகம் மற்றும் எழுதுபொருள் துறை தொழிலாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட் தொடங்கி 100 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. இச்சங்கத்தின் உறுப்பினர்கள் இயற்கை எய்தும் பட்சத்தில் அவர்தம் குடும்பத்தாருக்கு ஈமச் சடங்கிற்காக ரூ.20,000/- (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) வழங்கப்பட்டு வருகிறது.

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் பணிபுரியும் அலுவலர்கள் / பணியாளர்களிடையே சேமிப்பு மனப்பான்மையை ஊக்குவிக்கும் பொருட்டு தொடர் வைப்புத் திட்டம் மற்றும் கால வைப்புத் திட்டங்கள் தமிழ்நாடு அரசினர் அச்சக மற்றும் எழுதுபொருள் துறை தொழிலாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்-இல் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இச்சங்க உறுப்பினர்களுக்கு தகுதியின் அடிப்படையில் அதிகபட்சமாக

ரூ.12,00,000/- (ரூபாய் பன்னிரெண்டு இலட்சம் மட்டும்) கடனாக அளிக்கப்படுகிறது.

மேலும், பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் தமிழ் மொழியை ஒரு பாடமாகக்கொண்டு அதிக மதிப்பெண்கள் பெற்று, தரவரிசைப்படி முதல் மூன்று இடங்களைப் பெறும் சங்க உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் பரிசுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

**உ) கூட்டுறவு பண்டகசாலை.**

1965-ஆம் ஆண்டு முதல் சென்னை அரசு மைய அச்சக வளாகத்தில் தொழிலாளர்கள் / பணியாளர்கள் மற்றும் ஓய்வு பெற்ற பணியாளர்கள் நியாய விலையில் உணவுப் பொருட்களை பெற்று பயனடையும் வகையில் ஒரு கூட்டுறவு பண்டகசாலை சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது.



**ஊ) அரசு அச்சகக் குடியிருப்பு.**

சென்னை, தண்டையார் பேட்டை, காமராஜர் நகரில் அரசு அச்சகப் பணியாளர்களுக்கென கட்டப்பட்டுள்ள குடியிருப்புகள் 60 ஆண்டுகள் கடந்த நிலையில், குடியிருப்பதற்கு ஏற்றவாறு இல்லாததைக் கருத்தில் கொண்டு 2022-2023-ஆம் நிதியாண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி இக்குடியிருப்புகளை முற்றிலுமாக இடித்துவிட்டு சென்னை பெருநகர குழும வளர்ச்சி திட்டத்தின் திருத்திய விதிகளின்படி நவீன வசதிகளுடன் கூடிய ஆறு அடுக்கு மாடிகள் கொண்ட 96 குடியிருப்புகள் கட்டுவதற்காக ரூ.34,49,25,222/- (ரூபாய் முப்பத்து நான்கு கோடியே நாற்பத்து ஒன்பது இலட்சத்து இருபத்து ஐந்தாயிரத்து இருநூற்று இருபத்து இரண்டு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் 11.05.2023 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, பொதுப் பணித் துறையினரால் 11,000 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டு, பணிகள் முடியும்

தருவாயில் உள்ளன. மேலும், 64 குடியிருப்புகள் கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**9. பணியாளர்கள் நியமனம்.**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், செய்தித் தாள் விளம்பரங்கள், வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் நேரடி நியமனம் மற்றும் கருணை அடிப்படையில் நியமனம் ஆகியவற்றின் மூலம் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் பணியாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

இதன்படி, 07.05.2021 முதல் கருணை அடிப்படையில் 14 பணி நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 11 இளநிலை உதவியாளர்களும், 11 தட்டச்சர்களும் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், 24 தொழில்நுட்ப பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



**வெளி ஆதாரம் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள்.**

பல்கலைக்கழகத் தேர்வுகள், அரசுத் தேர்வுகள் மற்றும் அவசரப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு, 49 மஸ்தூர்கள், 75 சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் 34 பாதுகாவலர்கள் (Security), 1 ஓட்டுநர் என மொத்தம் 159 பணியாளர்கள் வெளி ஆதார முறையில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வருகிறார்கள்.

**10. வரவு–செலவு.**

2023–2024–ஆம் ஆண்டுக்கான வரவு–செலவு மற்றும் 2024–2025–ஆம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடு விவரங்கள்

| கணக்குத் தலைப்பு | | (ரூபாய் ஆயிரத்தில்) | | | |
|---|---|---|---|---|---|
| | | **2023–2024–ஆம்** ஆண்டு வரவு–செலவு மதிப்பீடு **(B.E)** | **2023–2024**–ஆம் ஆண்டு வரவு–செலவு திருத்திய மதிப்பீடு **(R.E)** | **2023–2024**–ஆம் ஆண்டு இறுதி திருத்திய நிதி ஒதுக்கீடு **(FMA)** | **2024–2025**–ஆம் ஆண்டு வரவு – செலவு திட்ட மதிப்பீடு **(B.E)** |
| 2058 | எழுதுபொருள் மற்றும் அச்சு | 166,01,98 | 166,16,08 | 165,69,38 | 186,91,46 |
| 2059 | பொதுப் பணிகள் | 52,49 | 52,49 | 52,49 | 25,00 |
| 4058 | எழுது பொருள் அச்சிடுதல் குறித்த மூலதனச் செலவு | 15,50,30 | 29,41,83 | 29,41,83 | 18,49,54 |
| **மொத்தம்** | | **182,04,77** | **196,10,40** | **195,63,70** | **205,66,00** |



**11. கழித்தொதுக்கம்.**


2023–2024–ஆம் ஆண்டில் ஒன்றிய அரசின் சார் நிறுவனமான உலோகக் கழிவுகள் வர்த்தக நிறுவனம் மூலம் காகித கழிவுகளை மின்–ஏல முறையில் விற்பனை செய்ததில் ரூ.93,97,728/– (ரூபாய் தொன்னூற்று மூன்று இலட்சத்து தொன்னூற்று ஏழாயிரத்து எழுநூற்று இருபத்து எட்டு மட்டும்) வருவாயும், இயந்திர உதிரி பாகங்கள் மற்றும் உபயோகப்படுத்தப்பட்ட அலுமினிய அச்சுத் தகடுகளை கழித்தொதுக்கம் செய்ததில் ரூ.70,15,589/– (ரூபாய் எழுபது இலட்சத்து பதினைந்தாயிரத்து ஐந்நூற்று எண்பத்தொன்பது மட்டும்) அரசுக்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. இவைத் தவிர, பழைய தட்டச்சுப் பொறிகள் (Type Writers) பொது ஏலம் மூலம் கழித்தொதுக்கம் செய்ததில் ரூ.99,98,200/– (ரூபாய் தொன்னூற்று ஒன்பது இலட்சத்து தொன்னூற்று எட்டாயிரத்து இருநூறு மட்டும்) என மொத்தமாக ரூ.2,64,11,517/– (ரூபாய் இரண்டு கோடியே அறுபத்து நான்கு இலட்சத்து பதினொன்றாயிரத்து ஐந்நூற்று பதினேழு மட்டும்) அரசுக்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

## 12. தகவல் பரவலாக்கம்.

பொதுமக்கள் தங்களின் பெயரினை திருத்தம் செய்யவோ அல்லது மாற்றம் செய்யவோ தேவையான படிவங்களை வலைதளம் மூலம் உடனுக்குடன் பதிவிறக்கம் செய்துகொள்ளும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், இவ்வலைதளத்தை மேம்படுத்த 2022–2023–ஆம் நிதியாண்டில் ரூ.2,00,000/– (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு தேசிய தகவல் மையம் (National Informatics Centre) மூலம் வலைதளம் மேம்படுத்தப்பட்டுள்ளது.

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறைக்கென https://www.stationeryprinting.tn.gov.in எனும் இணைய வலைதளம் வடிவமைக்கப்பட்டு நடைமுறையில் உள்ளதுடன், பொதுமக்கள் தங்களின் பெயரில் திருத்தம் செய்தல் மற்றும் மாற்றம் செய்தல் குறித்து வெளியிடப்படும் அறிவிக்கைகள், தமிழ்நாடு அரசிதழ்கள், அரசின் அறிவிக்கைகள், தனியார் அறிவிக்கைகள், நிறுவனச் சரிவு நொடிப்பு நிலை மனு குறித்த அறிவிக்கைகள் ஆகியன அச்சிடப்பட்டு இவ்வலைதளத்தில் ஒவ்வொரு வாரமும் புதன்கிழமை அன்று பதிவேற்றம் செய்யப்படுகின்றன.





## நிறைவுரை

தமிழ் மொழியின் அழகினை புத்தக வடிவில் மெருகேற்றுவதில் அச்சுப் பணியின் பங்கு இன்றியமையாததாகும். 192 ஆண்டுகள் தொன்மை வாய்ந்த எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையானது தமிழ்நாடு அரசின் வழிகாட்டுதலின்படி தற்போது உள்ள நவீன காலத்திற்கேற்ப நவீன இயந்திரங்களைக் கொண்டு உயர் தொழில்நுட்பத்துடன் பல வண்ணங்களில் உயர் தரத்துடன் குறித்த காலத்தில் அச்சுப் பணிகளை செயலாக்கம் செய்து, முழு அர்ப்பணிப்புடன் பெரும் பங்காற்றி தமிழ்நாடு அரசுக்காகவும், பொது மக்களுக்காகவும் தனது சேவையில் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. மேலும், அனைத்து அரசு துறைகளும் அன்றாடப் பணிகளை நிறைவேற்றுவதற்கு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை முதுகெலும்பாக திகழ்கிறது.

**மு.பெ.சாமிநாதன்**
**தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர்.**